செய்தி வெளியீடு எண் : 1385 நாள் : 13.07.2023

## செய்தி வெளியீடு

# மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களின் தலைமையில் நீர்வளத்துறையின் கீழ் இயங்கும் சென்னை மண்டலத்தைச் சார்ந்த பணிகள் குறித்து அனைத்து நீர்வளத்துறை அலுவலர்களுடன் இன்று 13.07.2023 ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து அரசினால் ஒதுக்கப்பட்ட ரூ.20.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் நடைபெறவுள்ள பணிகள் குறித்து விவாதித்தார். மேலும் இப்பணிகள் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன் 15.09.2023 முன்பாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள அனைத்து கால்வாய்களையும் தூர்வாரி, ஆகாயத்தாமரைகள் அகற்றப்பட்டு நீர் தங்கு தடையின்றி செல்ல வழிவகை செய்யவேண்டும் என உத்தரவிட்டார். மேலும், நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளும் பணிகள் மற்றும் அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத்திட்டப் பணிகள், நீர்வள, நிலவள திட்டப்பணிகள் ஆகியவற்றினை திட்டமிடப்பட்ட காலத்திற்குள் விரைந்து முடிக்கவேண்டுமென அறிவுரை வழங்கினார்.

மேலும் கடந்த ஆண்டு நிரந்தர வெள்ளத்தடுப்பு பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.434.00 கோடி அளவில் நடைபெற்று வரும் போரூர் ஏரி உபரிநீர் கால்வாய், அடையாறு ஆற்றினை அகலப்படுத்தும் பணி, கொசஸ்தலையாற்றின் வெள்ளக்கரை அமைக்கும் பணி, சென்னை மாநகரில் அமைந்துள்ள முக்கிய ஏரிகளில் நீர் ஒழுங்கிகள் அமைக்கும் பணிகள், பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதி, செம்மஞ்சேரி பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது குறித்தும் அதன் செயல்பாடுகள் குறித்தும் விவாதித்தார்.

இந்த ஆண்டு சென்னை மற்றும் புறநகர் பகுதியினைச் சார்ந்த கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட தணிகாச்சலம் நகர் கால்வாய் மேம்படுத்தும் பணி, கொளப்பாக்கம், கெருகம்பாக்கம், மணப்பாக்கம் பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகள் மற்றும் மாதவரம் ரெட்டை ஏரியில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வு கூட்டத்தில், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., அரசு கூடுதல் செயலாளர் திருமதி. எஸ். மலர்விழி, இ.ஆ.ப., நீர்வளத்துறை சிறப்புச் செயலாளர் திரு. கா. முருகன், முதன்மை தலைமைப் பொறியாளர் திரு. ஏ. முத்தையா, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் திரு. கே. அசோகன், திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளர் திரு. ஜி. பொன்ராஜ், கண்காணிப்பு பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,**
**நீர்வளத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in